முருகப்பெருமான் துணை

**மகான் பீர்முகமது அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.05.2022, ஞாயிற்றுக்கிழமை

1. மனிதசக்திக்கு மரணம் வெல்லும்
மகத்துவம் தந்தருளி காக்க
கனிவேலவன் சக்தியாக வந்த
கருணை கடலே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடை திங்கள்
வரங்களென அட்டம திகதி கதிர் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 08 ம் நாள், 22.05.2022 ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் பீர்முகமது யானும்
3. யானும் அருளாசி தன்னை
உலகநலம்பெற உரைப்பேன்
ஞானவான்களாக மக்களும்
நல்நிலை கண்டுமே தேறிட
4. தேறிட பிரணவக்குடிலை நாடி
தெய்வ நெறி காட்டும் தேசிகன்
நெறிபட வாழ்வினை தொடர
நிலைத்தன்மை தரும் (சுப்ரமண்ய) இறை ஞானம்
5. ஞானம் பயின்று வாழ்வினை
ஞானிகள் ஆசி பெறும்படி
தானம் தருமம் வளர்க்கும் வண்ணம்
தவராஜனை தொடர்ந்து வர
6. வருகவே மக்களை வதைக்கும்
வகையிலா மாயை விலகும்
தரும பலம் இறைபலம் எனும்
தனிப் பெருஞ் சக்தி பரவி
7. பரவி பேருலகம் தன்னில்
பண்பாளர்கள் தனை நிறுவி
அறிவு தெளிவு திடம் கூடிட
ஆபத்தான இன பேத எண்ணம் நீக்கி
8. நீக்கியே சமத்துவ சமதர்ம
நீதிமான்களாக மக்களெல்லாம்
தேக்கமின்றி தேறி மீள்வர்
தேசிகன் அவதார பலமறிந்து
9. அறிந்து உணர்ந்து தொடர்ந்து
அரியாமை எனும் சக்திபெறுவர்
அறிந்தும் அறியாமலும் செய்த
அனைத்து பாவ கருமவினைகளும் விலகி

10. விலகியே தொடர் தெளிவு கூடி
வேலவன் சக்தியான அரங்கன்
பலமாக உலகோர் மாறி
பண்பான சமூகம் படைப்பர்

11. படைப்பர் ஞானத் தலைமையை
படைப்பர் ஞான ஆட்சியை
தடைபடா தொடர்ந்து வருக
தவசி வழி உலகமாற்றமே புரிவர்
அருளாசி முற்றே

–சுபம்–